# CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com


# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் சுற்றுமடல்.

# கூட்டொருங்கியக்க திருஅவையின் செயற்பாடுகளை மேம்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக

**அன்புமிக்க இலங்கை வாழ் இறை மக்களே,**

**"ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்" (யோவான் 20:20).**

நாம் பாஸ்கா காலத்தில் இருப்பதால் உயிர்த்த ஆண்டவரின் ஆசீர்வாதங்களை வழங்கி கத்தோலிக்க ஆயர் பேரவையானது உங்களை மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றது. 2026ஆம் ஆண்டு வைகாசி மாதம் 1ஆம் திகதி தொழிலாளரான புனித சூசையப்பரின் திருவிழா கொண்டாட்டத்தின் போது இலங்கை திருஅவையில் கூட்டொருங்கியக்க திருஅவைக்கான மாமன்றத்தினால் நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை உங்கள் எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க கிடைத்த சந்தர்ப்பத்திற்காக நன்றி கூறுகின்றோம்.

1. **கிறிஸ்தவர்கள் மறைப் பணிக்காகத் திருமுழுக்கு பெற்றுள்ளார்கள். நாம் பெயரளவில் கிறிஸ்தவர்கள் அல்ல. "மறை பரப்புப் பணியிலே அனைத்து திருமுழுக்கு பெற்றோரும் உள்ளடக்கப்படுவர்"** (கூட்டொருங்கியக்க திருஅவையின் இறுதி ஆவணம், சுருக்கமாக FD 66). "பன்முகப்படுத்தப்பட்ட சூழல்களில் வேரூன்றப்பட்ட தல திருஅவையில் இறைமக்கள் மீட்பின் நற்செய்தியை போதிப்பதோடு அதற்கு சான்று பகர்கிறார்கள்" (FD 17). இறைமக்கள் என்ற ரீதியிலே தற்காலத்திலே "திருஅவைகளுக்கு தூய ஆவியார் கூறுவதை கேட்க" (திருவெளிபாடு 2:7) நாங்கள் எல்லோரும் அழைக்கப்படுகின்றோம். இந்த சுய ஆய்வானது "ஆண்டவரை கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்" (யோவான் 20:20) என்ற அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் நோக்கி எங்களை அழைத்துச் செல்கின்றது.

2. இப்பணியை நிறைவேற்றுவதற்காக உலகெங்கும் உள்ள திருஅவையானது "கூட்டொருங்கியக்க திருஅவைக்காக: ஒருங்கிணைப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு" என்ற தலைப்போடு கூட்டொருங்கியக்க திருஅவையின் வழிகளுக்குள் நுழைந்துள்ளது. இது "ஆண்டவரை பின்பற்றுவதிலும் அவருடைய பணிக்கு தங்களை அர்ப்பணிப்பதிலும் உண்மை உள்ளவர்களாக இருப்பதற்கான வழிகளை தேடுவதிலும் மகிழ்ச்சிக்கும் திருஅவையின் புதுப்பித்தலுக்குமான ஓர் அழைப்பு ஆகும்" (FD 3).

3. கூட்டொருங்கியக்கம் என்பது திருஅவையின் நோக்கம் அல்ல, ஆனால் அது தூய ஆவியானவரின் வழிகாட்டுதலின் மூலம் கிறிஸ்துவினால் திருஅவையிடம் ஒப்படைக்கப்பட்ட பணியின் ஒரு சேவையாகும் (காண் FD 32). "பணி சார்ந்த நோக்குடையதான கூட்டொருங்கியக்க இயக்கமானது பணி சார்ந்ததாக திருஅவையின் எல்லா நிலைகளிலும் பரஸ்பர செவிமடுத்தலிலும், உரையாடலிலும், குழு ஆய்விலும் ஈடுபடுகின்றது. சுருக்கமாக சொன்னால் கூட்டொருங்கியக்க திருஅவை என்பது ஆன்மீக புதுப்பித்தலுக்கும், சீர்திருத்தத்திற்கும் பாதையாக அமைவதோடு அது திருஅவையை மென்மேலும் பங்குபெற்றுதலோடு, நற்செய்தி அறிவிப்பு பணி சார்ந்தவற்றை ஊக்குவிப்பதால் அது கிறிஸ்துவின் ஒளியை பிரகாசித்துக் கொண்டு எல்லா மக்களோடும் பயணிக்கின்றது" (FD 28).

CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com

4. இக்கூட்டொருங்கியக்க திருஅவையின் பயணமானது 2021ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் திருத்தந்தை பிரான்சிஸ்சினால் பிரகடனம் செய்யப்பட்டு மூன்றாம் கட்ட நடைமுறையை அடைந்துள்ளது. "2025 - 2028 வரை மாமன்றத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான கட்டத்தின் வழிமுறைகள்" மாமன்றத்தின் பொதுச் செயலாளரினால் ஒப்புவிக்கப்பட்டு திருத்தந்தை 14ஆம் லியோவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வழிமுறைகளானது முழு திருஅவையும் ஒரே பொது வேலை திட்டத்திற்குள் முன்னோக்கி செல்லவும் அத்தோடு 2028ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாவது திருஅவை அமர்வு ஆயத்தத்துக்காகவும் தல திருஅவைகளுக்குள் கலந்துரையாடலை ஊக்குவிக்கவும் வழிகோலுகிறது. (cf. Pathways. பக். 5). இதன் நோக்கம் ஒவ்வொரு தல திருஅவைக்குள்ளும் அன்றாடம் கூட்டொருங்கியக்க இயக்கமாக செயல்படுகிற ஒரு கலாச்சாரத்தை (பங்குகளில், மறைமாவட்டங்களில்) ஊக்குவிப்பது ஆகும்.

5. இப்பகுதியின் நோக்கம், திருஅவையின் வாழ்க்கையை மேலும் "கூட்டொருங்கியக்க மாமன்ற" (Synodal) தன்மையுடையதாக ஆக்குவதற்கான புதிய நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகளை ஆய்வு செய்வதாகும் (Pathways, பக். 7). இது உரோமாபுரியிலிருந்து வரும் கட்டாய கோரிக்கையோ அல்லது செயல்பாடுகளின் தொடரோ அல்ல மாறாக, உள்ளூர் திருஅவைகள் தங்கள் சூழ்நிலைகளில் உண்மையான கூட்டொருங்கியக்க திருஅவையின் மாற்றத்தை ஏற்படுத்த உதவும் உருவாக்கப் பாதைகளை கண்டறிய வேண்டிய அழைப்பாகும் (அதே நூல்). எளிமையாகவும், உறுதியாகவும் சொல்வதானால், இது Lumen Gentium எனும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வெளியீட்டினால் முன்வைக்கப்பட்ட படிப்பினைகளை நடைமுறையில் கொண்டு வர வேண்டிய அழைப்பாகும்.

6. நடைமுறைப்படுத்தும் கட்டம் பின்வரும் பகுதிகளில் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது (Pathways, பக். 20). குறிப்பாக, ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரின் தலைமையிலும், தீர்மானத்திலும், அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களுடன் இணைந்து செயல்படுவதற்கான சுதந்திரம் வழங்கப்படுகிறது (cf. Pathways, பக். 9). இதற்காக, கீழ்க்கண்ட பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

a. மறைமாவட்ட ஆயரின் தலைமையில் மறைமாவட்ட கூட்டொருங்கியக்க திருஅவைக் குழுக்களை அமைத்தல் (cf. Pathways, பக். 9-12).

b. இறுதி ஆவணத்தை முழுமையாக ஆய்வு செய்தல் குறிப்பாக, மறைமாவட்ட கூட்டொருங்கியக்க திருஅவைக் குழுக்கள் ஆயரின் வழிகாட்டுதலின் கீழ் முழு செயல் முறையையும் முன்னெடுக்க வேண்டும் (cf. Pathways, பக். 7).

c. "ஆவியில் உரையாடல்" (Conversation in the Spirit) மூலம் கூட்டொருங்கியக்க திருஅவையின் ஆன்மீகத்தை மேம்படுத்துதல் (cf. FD 43-46). இந்த உரையாடல் தாழ்மையுடன் செவிமடுத்தல், பேசும் சுதந்திரம் மற்றும் கலந்துரையாடலுக்கான திறந்த மனம் போன்றவற்றைத் தருகின்றது. திருஅவையானது அனைத்து விடயங்களிலும் ஆண்டவருக்கும் அவருடைய மக்களுக்கும் சேவை செய்ய கூட்டொருங்கியக்க தன்மையுடன் நிலைத்திருக்க இதுவே வழியாகும்.

d. திருமுழுக்கு பெற்றவர்களாக (குருக்கள் மற்றும் பொதுமக்கள் இருவரும்) பொறுப்புகளை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துதல் எமது மேய்ப்புப் பணியில் சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு, குழுக்களுக்கு (Small Christian Communities) முன்னுரிமை வழங்குதல் (cf. FD 60, 75-77).

# CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com


e. திருஅவை சார்ந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் (cf. FD 81–86), கூட்டொருங்கியக்க திருஅவையில் முடிவெடுக்கும் நடைமுறைகளைச் செயல்படுத்துதல் (cf. FD 93–94), வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் மதிப்பீட்டு முறைகளை மறைமாவட்ட மற்றும் பங்கு மட்டங்களில் ஆராய்ந்து மேம்படுத்துதல் (cf. FD 95–102).

f. உத்தியோகபூர்வமாக அமைக்கப்பட்ட நடைமுறையில் உள்ள, பங்களிப்பு செய்யும் உறுப்புகளான (மறைமாவட்டக் கூட்டொருங்கியக்க திருஅவைக் குழுக்கள், மறைமாவட்ட குருக்களின் பேரவை, மறைமாவட்ட மேய்ப்புப் பணி சபை, பங்கு மேய்ப்புப்பணி சபை, மறைமாவட்ட மற்றும் பங்கு நிதிக் குழுக்கள்) சட்ட வரையறைக்குட்பட்டதாக, புதுப்பிக்கத்தக்க முறையில் அவர்களுடைய நடைமுறைச் செயல்பாடுகள் அனைத்தும் இருக்க வேண்டும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஒத்துழைப்பை வளர்க்கும் வகையில் அவற்றின் செயல்முறைகள் கூட்டொருங்கியக்க மனப்பான்மையில் புதுப்பிக்கப்பட வேண்டும். (cf. FD 103–106).

g. பங்குகளை கூட்டொருங்கியக்க முறையில் மற்றும் மறைபரப்பு (missionary) ஆர்வத்தின் ஒளியில் புதுப்பித்தல் (cf. FD 117). மேலும், இலங்கையின் பல மத, இன, கலாச்சார, பண்பாட்டு சூழ்நிலையை கருத்தில் கொண்டு, “வாழ்க்கைக்கான உரையாடல்” (Dialogue of Life) மூலம் ஒவ்வொரு நிலைகளிலும் சாட்சியாக இருக்கும் சமூகமாக மாற முயற்சிக்க வேண்டும்.

h. கிறிஸ்தவ புகுமுக நிலைகளில் கூட்டொருங்கியக்க தன்மையை ஆய்வு செய்தல் (cf. FD 142) குறிப்பாக அவற்றுடன் தொடர்புடைய பயிற்சி நெறிகள் மற்றும் நற்பயிற்சி நிலையங்களை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் (cf. FD 143–151). குறிப்பாக, குருத்துவப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கும், துறவற வாழ்வை தேர்ந்தெடுக்க விரும்புவோருக்கு வழங்கப்படும் உருவாக்கப் பயிற்சிகளில் கூட்டொருங்கியக்க திருஅவையின் பண்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டும்.

7. 2025ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொடங்கிய தற்போதைய செயல்படுத்தும் கட்டம் 2026ஆம் ஆண்டின் இறுதி வரை நீடிக்கும். அத்தோடு 2027ஆம் ஆண்டின் முதற் பகுதி மறைமாவட்ட மட்டத்தில் நடைபெறும் மதிப்பீட்டு, ஒன்று கூடல்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2027ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி தேசிய மற்றும் ஆயர் மன்ற மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2028ஆம் ஆண்டானது கண்டங்கள் ரீதியான (Continental) மதிப்பீட்டுக்கும், வத்திக்கானில் நடைபெறும் திருஅவை அமர்வுக்கான (Ecclesial Assembly) கொண்டாட்டத்திற்கும் ஏற்ற விதமாக எம்மை வழிநடத்துதல்.

8. “கூட்டொருங்கியக்க திருஅவையாக வளர்வது என்பது அனுபவத்தின் மூலம் மட்டுமே பெறக்கூடிய அறிவை எதிர்பார்ப்பதோடு, அது ஆண்டவருடனான சந்திப்பிற்கு நம்மை அறிமுகப்படுத்துகிறது” (Pathways, பக். 8). இந்த முழு கூட்டொருங்கியக்க பயணத்தின் நோக்கம், எருசலேமில் நடைபெற்ற திருஅவையின் முதல் கூட்டொருங்கியக்க நிகழ்வின் அனுபவத்தில் நம்மை உறுதிப்படுத்துவதாகும். அதாவது, பின்வரும் வார்த்தைகளின் அடிப்படையில், “பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நன்றாகத் தோன்றியது” (திருத்தூதர் பணிகள் 15:28, ஒப்பிடுக FD 81)

**CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA**
Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com

9. இந்த கூட்டொருங்கியக்க திருஅவையின் பயணத்தின் மாதிரி தூய கன்னி மரியாள் - இறைவனின் தாய், திருஅவையின் தாய், மனிதகுலத்தின் தாய். அவர் செவிமடுக்கின்ற, செபிக்கின்ற, தியானிக்கின்ற, உரையாடுகின்ற, உடனிருந்து வழிநடத்துகின்ற, பகுத்தறிகின்ற, தீர்மானிக்கின்ற, செயல்படுத்துகின்ற திருஅவையின் வடிவமாக இருக்கிறார். அவரிடமிருந்து நாம் செவிமடுத்தலின் கலை, இறை சித்தத்திற்கான கவனம், இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிதல், ஏழைகளின் தேவைகளை செவிக்கொடுக்கத் தயாராக இருப்பதோடு அந்தப் பாதையில் நடக்கத் தயாரான மனப்பான்மை போன்றவற்றைக் கற்றுக்கொள்கிறோம். (FD 29).

10. இலங்கையின் ஆயர்களாகிய நாங்கள் எல்லோரும் திருஅவையில், திருமுழுக்கின் மூலம் பெற்ற பொதுப்பணியை நிறைவேற்றுவதற்காக கூட்டொருங்கியக்க ஆன்மீகத்தையும், கூட்டொருங்கியக்க முறையிலான திருஅவை வாழ்வையும் உறுதி செய்து மேம்படுத்துகிறோம். விசுவாசிகள், குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரையும் தத்தமது பலவிதமான பொறுப்புகளுடன், மீட்பராகிய கிறிஸ்து திருஅவைக்கு ஒப்படைத்த நற்செய்தியின் வாழ்க்கை முறையில் அர்த்தத்தை தேடி கண்டுபிடிக்க ஒன்றிணைந்து செயல்பட அழைக்கிறோம்.

எங்கள் பயணத்தில் இலங்கையின் இராக்கினியான அன்னை மரியா (Our Lady of Lanka) எம்மை வழிநடத்துவாராக. இலங்கையின் திருத்தூதராகிய புனித யோசேப்வாஸ் (St. Joseph Vaz) கூட்டொருங்கியக்க இலங்கை திருஅவையாகத் திகழ எமக்கு ஒரு முன்மாதிரிகையாக இருப்பாராக.

**ஆண்டவரில் அர்ப்பணிப்புடன்,**

✠ **மேதகு ஆயர். ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை**
**தலைவர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**குருனாகல் மறைமாவட்ட ஆயர்,**

✠ **மேதகு ஆயர். அன்ரன் ரஞ்சித் ஆண்டகை,**
**பொதுச்செயலாளர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**மட்டகளப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர்**

✠ **அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்**

✠ **மேதகு ஆயர். நோயல் இம்மானுவேல் ஆண்டகை,**
**உபதலைவர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

## CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11- 2697062 / 2697110
Fax.No : 0094-11- 2699619
E-mail : EpiscopalSL@gmail.com


✠ மேதகு ஆயர். ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை
காலி மறைமாவட்ட ஆயர்
கூட்டொருங்கியக்க பொறுப்பு ஆயர்

✠ மேதகு ஆயர். வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
கண்டி மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
யாழ்ப்பான மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். ஜூட் நிஷாந்த சில்லா ஆண்டகை
பதுளை மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். விமல் ஸ்ரீ ஜயசூரிய ஆண்டகை
சிலாப மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். அன்டன் வைமன் குருஸ் ஆண்டகை
இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்
ஆண்டகை – மன்னார் மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். சாகர ஜெயமான (SSS)ஆண்டகை
அனுராதபுர மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஆயர். மெக்ஸ்வல் G. சில்வா ஆண்டகை
கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்,

✠ மேதகு ஆயர். ஜே.டி. அந்தனி ஆண்டகை
கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்,